திருவிடைமருதூர் வட்டத்தில் குறுவை சாகுபடிக்கான விதை நெல் வழங்கல்

* வினா எண். 28—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகாவில் உள்ள அரசாங்க விதை டெப்போக்களிலும் ஒன்றிய வேளாண்மை டெப்போக்களிலும் குறுவை சாகுபடிக்கான நெல் விதைகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தட்டுப்பாடு நீங்க மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் சுமார் 900 டன்கள் குறுவை விதைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதை ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வெளி வருகின்ற புதிய ரக நெல் வித்துக்கள் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. விதை வித்துக்கள் அரசாங்க டெப்போக்களுக்கு வந்தவுடனேயே பெரிய விவசாயிகள், மிராசுதாரர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். எனவே, சிறு விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட புதிய ரக நெல் வித்துக்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ? இரண்டாவது வெளி மார்கெட்டிலே அதிக விலைக்கு நெல் விற்கின்றபோது அரசாங்க டெப்போக்களிலுள்ள நெல்லை வெளி மார்க்கெட்டிலே சில அதிகாரிகள் விற்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுத்து, சிறு விவசாயிகளுக்கு அப்பேர்ப்பட்ட நெல் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றிய புகார் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்தின் அடிப்படையில், நிச்சயமாக அரசு இதற்கு ஆவன செய்யும்.

புதிய விவசாயக் கிடங்குகள்.

*வினா எண். 29—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) புதிதாக விவசாய கிடங்குகள் ஆரம்பிக்க ரூ. 25 ஆயிரத்துக்கு விவசாயிகள் விதை வாங்கி இருந்தால்தான் ஆரம்பிக்கப்படும் என ஏதாவது நிபந்தனை உள்ளதா ?

(ஆ) அப்படியானால் மேற்படி நிபந்தனை தளர்த்தப்படுமா ?